## நாகப்பட்டினம் நகராட்சி

## 2024-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ஆம் நாள் வியாழன் கிழமை காலை 11.00

## மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மான நகல்

<table>
<tr><th>கூட்ட நடைபெற்ற நாள்</th><th colspan="3">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>29–08–2024</td><td colspan="3">பொருள் எண்.1<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீலை 2024 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும்.</td><td>தீர்மானம் எண். 168<br>அ. கு<br>பதிவுசெய்யப்பட்டது</td></tr>
<tr><td rowspan="4">29–08–2024</td><td colspan="3">பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம் செல்லூர் கிராமத்தில் நாகப்பட்டினம் நகராட்சியின் மூலம் புதியதாக பேரூந்து நிலையம் அமைக்க இந்து சமய அறநிலைத்துறைக்கு சொந்தமான நிலங்களை கையகப்படுத்துதலுக்கு நிர்வாகம் அனுமதி மற்றும் நிதிஒப்பளிப்பு வரப்பெற்றுள்ளதனை தொடர்ந்து நிலம் கையகப்படுத்தலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை மறுவாழ் மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம் மத்திய சட்டம் 30/2013 பிரிவு 11(1) ன்படி பொது அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான கட்டணத்தொகை ரூ.354144/னை செலுத்திட கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் ந.க.எண் 13872/2022/ஊ1 நாள் 04.07.2024ல் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் பொருள் தொடர்பாக விளம்பரம் செய்யப்பட்டமைக்கான விளம்பர கட்டணத்தொகை ரூ. 354144/னை “NIDUS Advertising & Marketing Pvt” Chennai நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td rowspan="4">தீர்மானம் எண்.169<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td colspan="3">ந.க.எண். 1242/2023/இ1</td></tr>
<tr><td rowspan="2">29–08–2024</td><td colspan="3">பொருள் எண்.3<br>நாகப்பட்டினம் நகராட்சியின் மூலம் 2024-2025 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்படவுள்ள திட்டப்பணிகள் தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்புகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரங்கள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல், பொறியியல் பிரிவு தொடர்பான ஏலம் விளம்பரம் செய்தல் தமிழக அரசின் ஆண்டு சாதனைகளை விளம்பரம் செய்தல் மற்றும் இதர வகையான விளம்பரங்களை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச விளம்பரம் கட்டணத்தொகை ரூ25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td rowspan="2">தீர்மானம் எண்.170<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். ந.க.எண். 79/2024/இ1</td><td></td></tr>
<tr><td>29–08–2024</td><td>பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம ரூ.0.50 இலட்சத்தில் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 38/2023/இ1</td><td>தீர்மானம் எண்.171<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–08–2024</td><td>பொருள் எண்.5<br>அரசாணை (நிலை) எண் 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை நாள்19.04.2021ன் படி 2024-2025ம் ஆண்டிற்கு கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு நகராட்சி நிலைகேற்ப பங்களிப்பு தொகையினை உரிய விதிமுறைகளின்படி செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதனை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 1074/2021/அ-4, நாள்28.06.2024ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து நாகப்பட்டினம் நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாக உள்ளதால் அதற்கான பங்களிப்புத் தொகை ரூ.125000/ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவுச் செய்யலாம்<br>2. மேற்படி பங்களிப்புத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2224/2024/சி1</td><td>தீர்மானம் எண்.172<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–08–2024</td><td>பொருள் எண் 6<br>நாகப்பட்டினம் நகராட்சியில் தற்போது அனைத்து பிரிவுகளிலும் இயங்கி வரும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் அவ்வப்பொழுது பழுதுகள் ஏற்பட்டு வருவதால் முழுமையாக பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. இந்நிலையினை தவிர்க்கும் பொருட்டு புதியதாக கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2064/2024/இ1</td><td>தீர்மானம் எண்.173<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–08–2024</td><td>பொருள் எண்.7<br>வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 13 முதல் வார்டு 24 வரை உள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் வடிகால்கால்களில் மழைநீர் தேங்காமல் வெளியேற்றுவதற்கு உரிய வகையில் JCB மற்றும் Hitachi</td><td>தீர்மானம் எண்.174<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>இயந்திரங்களை கொண்டு தூர்வாருவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் பார்வையிட்டு பதிவுச் செய்யலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2103 /2023/இ1-1</td><td></td></tr>
<tr><td>29–08–2024</td><td>பொருள் எண்.8<br>நாகப்பட்டினம் நகராட்சி வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு வார்டு 25 முதல் வார்டு 36 வரை உள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் வடிகால்கால்களில் மழைநீர் தேங்காமல் வெளியேற்றுவதற்கு உரிய வகையில் JCB மற்றும் Hitachi இயந்திரங்களை கொண்டு தூர்வாருவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ. 5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2103 /2023/இ1-1</td><td>தீர்மானம் எண்.175<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–08–2024</td><td>பொருள் எண்.9<br>நாகப்பட்டினம் நகராட்சி வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு வார்டு 1 முதல் வார்டு 12 வரை உள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் வடிகால்கால்களில் மழைநீர் தேங்காமல் வெளியேற்றுவதற்கு உரிய வகையில் JCB மற்றும் Hitachi இயந்திரங்களை கொண்டு தூர்வாருவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2103 /2023/இ1-1</td><td>தீர்மானம் எண்.176<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–08–2024</td><td>பொருள் எண்.10<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் வார்டு எண்.3-ல் செம்மாரகடைத்தெரு பகுதியில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதால் புதியதாக சிறுபாலம் அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.0.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2024/இ1</td><td>தீர்மானம் எண்.177<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>28–06–2024</td><td>பொருள் எண்.11<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் பெருமாள் கீழ வீதி தொடக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக GI SHEET அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய்</td><td>தீர்மானம் எண்.178<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்..<br>ந.க.எண். /2024/இ1 | | |
| 28-06-2024 | பொருள் எண்.12<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 ல் உள்ள தம்பிதுரை பூங்காவில் மறைமலை அடிகளார் அவர்களின் திருவுருவ சிலையை வைத்து, புதியதாக மேடை அமைத்து முன்புறத்தில் பேவர் பிளாக் அமைத்திடவும் மற்றும் மின்விளக்குகள் பொருத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2024/இ1 | தீர்மானம் எண்.179<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.13<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 36ல் உள்ள அங்காடி முன்புறத்தில் உள்ள இடத்தில் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் பொருட்கள் வாங்குவதற்கு சிரமமாக உள்ளதால் அதனை சீரமைத்து முன்புறத்தில் பேவர் பிளாக் தரை அமைத்திடவும் மற்றும் GI SHEET அமைத்திடும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் பார்வையிட்டு பதிவுச் செய்யலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2024/இ1 | தீர்மானம் எண்.180<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.14<br>நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் கணினி அறையை பழுது பார்த்து புதியதாக 2 எண்ணிக்கை AC பொருத்துதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் பார்வையிட்டு பதிவுச் செய்யலாம்<br>ந.க.எண். /2024/இ1 | தீர்மானம் எண்.181<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.15<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் மாப்பிள்ளை தெரு மற்றும் வண்ணார புதுத்தெரு சந்தில் சாலைகள் மிகவும் மோசமாகவும், இதனால் பொதுமக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதாலும் சிமெண்ட் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்டு மதிப்பீடு ரூ. 9.40 இலட்சத்தில் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.182<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.2941 /2024/இ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.16<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் மேலக்கோட்டைவாசலில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தற்போது இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி நடைபெற்று வருகிறது. மேற்காணும் பணியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஐந்து ஆண்டுகள் காலம் முடிவுற்றுள்ளதால் அதனை நகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பாதாளசாக்கடை கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்ள நகராட்சியில் பணியாளர்கள் இல்லாத நிலையில் உள்ளதால் தனியர் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்ள ஏதுவாக உரிய நிபந்தனைகளுடன் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.45.50 இலட்சத்திற்குண்டான பிரேரணையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி வழங்கிட கோரி அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2941 /2024/இ1 | தீர்மானம் எண்.183<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.17<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மழைநீர் அதிகமாக தேங்குவதை வெளியேற்ற மையதானத்தில் இருபுறங்களிலும் மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.184<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.18<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட சாலைகளில் பள்ளங்களினால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதாலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரிலும் தார் பேட்ச் மற்றும் சிமெண்ட் பேட்ச் அமைக்கும் பணிக்கு நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையம், சம்பாதோட்டம், காடம்பாடி பிள்ளையார் கோவில் தெரு மற்றும் மகாலெட்சுமி நகர் பகுதிகளில் பேட்ச் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தை மேற்கொள்வதற்கு திட்ட நிதியிலிருந்து வழங்குவதற்கு வழிவகை செய்யப்படாத காரணத்தினால் தற்போது நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள | தீர்மானம் எண்.185<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 79/2024/இ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.19<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் பகுதிகளில் அமைந்துள்ள பாதாளசாக்கடை குழாய்களில் ஆங்காங்கு ஏற்படும் கசிவு மற்றும் அடைப்புகளை சரிசெய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.186<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.20<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் பகுதிகளில் அமைந்துள்ள பாதாளசாக்கடை குழாய்களில் ஆங்காங்கு ஏற்படும் கசிவு மற்றும் அடைப்புகளை சரிசெய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.187<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.21<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN-51-F-6091 தற்சமயம் பொதுப்பிரிவில் இயங்கி வருகிறது. மேற்படி வாகனமானது தற்போது பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளதனை சீர்செய்திட ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.2406 /2024/இ1 | தீர்மானம் எண்.188<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.22<br>இந்நகராட்சிக்கு சொந்தமான TN-51-AF-6532 ஜெட் ராடிங் வாகனத்திற்கு ஆண்டு தகுதிச்சான்று பெறுவதற்கு உரிய பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.189<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ந.க.எண். 2201/2024/இ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.23<br>இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN-51-AK-9283 இலகுர வாகனத்திற்கு ஆண்டு தகுதிச்சான்று பெறுவதற்கு உரிய பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.190<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | ந.க.எண். 2490/2024/இ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.24<br>இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக வாகனம் எண் TN-51-AA-0028-க்கு ஆண்டு தகுதிச்சான்று பெறுவதற்கு உரிய பழுது நீக்கம் செய்வதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1.86 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.191<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | ந.க.எண். 2826/2024/இ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.25<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19ல் சங்கர விநாயக கீழ் சந்து (சாய கிணற்றுத் தெரு) மற்றும் பெருமாள் மேல வடபோக்கி தெரு ஆகிய பகுதிகளில் பாதாளசாக்கடை இணைப்புகள் விடுப்பட்டுள்ளதனை பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு புதியதாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.192<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | ந.க.எண். 79/2024/இ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.26<br>நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட / திட்ட அனுமதி கோரி பெறப்படு விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமையாளரின் சுய சான்றின் அடிப்படையில் 2500 சதுரடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுரடி வரையிலான தரைதளம் (அ) தரைதளத்துடன் கூடிய முதல் தளம் 7 மீ வரையிலான உயரம் கொண்ட குடியிருப்புக்கட்டிடங்கள் (இரு குடியிருப்புகள் மட்டும்) கட்டிட இணையவழி ( Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்தவேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்.18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 அரசாணையில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு | தீர்மானம் எண்.193<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br>3 இது குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் முக்கிய இடங்களில் விளம்பரப்பலகைகள் அமைக்கவும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 2604/2024/எப்1 | |
| 28–06–2024 | பொருள் எண்.27<br>நடைபாதை வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல் சட்டம் 2014 ன் பிரிவு 38 (1) ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் திட்டம் 2015 அத்தியாயம் IV விதி II ன் கீழ் அமைக்கவேண்டிய நகர விற்பனை குழுவின் ஆறு உறுப்பினர்களின் தேர்தல் அறிவிக்கை தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டது. மேற்படி விளம்பரத்திற்கான கட்டணம் ரூ.39,816/- தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 1215/2020/எப்1 | தீர்மானம் எண்.194<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.28<br>நாகப்பட்டினம் நகராட்சியில் 2024-2025 ஆம் ஆணடிற்கான உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் புதியதாக தொடரப்படும் வழக்கு தொடர்பாக இந்நகராட்சியின் சார்பாக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலம் வாதாடுவதற்கான வழக்கு கட்டணங்கள் மற்றும் வழக்கு தொடர்பான மற்றும் தணிக்கை இதர செலவினங்கள் வழங்கப்படவேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2458/2023/பி2 | தீர்மானம் எண்.195<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.29<br>நாகப்பட்டினம் நகராட்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைக்கப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது இயங்காத நிலையில் உள்ள ஆண்டிப்பாளையம் குடிநீரேற்று நிலையம் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் மற்றும் அப்பகுதியில் செடிக்கொடிகள் அதிகமாக இருப்பதாலும் அப்பகுதி மக்கள் அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த கோரியிருக்கிறார்கள். ஆனால் எதிர்வரும் காலங்களில் பயன்படக்கூடிய நிலையம் அக்கட்டிடத்தை பராமரிப்பு பணி செய்யவும் மற்றும் அப்பகுதியை சுத்தம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.50 | தீர்மானம் எண்.196<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 79/2024/இ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.30<br>நாகப்பட்டினம் நகராட்சியில் 2024-2025ஆம் நிதியாண்டில் சொத்துவரி, காலிமனைவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாளசாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களில் 100% வசூல் செய்திட ஏதுவாக ஆட்டோ மூலம் வரி நிலுவை தொகையினை செலுத்திடக்கோரி பொது மக்களுக்கு விளம்பரம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். 1428/2024/அ1 | தீர்மானம் எண்.197<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.31<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் ஒப்படைக்கும் நாள்முதல் ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ளும் உரிமையாணைக்கு 30.07.2024 அன்று நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள மறு பொதுஏலத்தின் அறிவிப்பினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்வதற்கும், வீடியோ கவரேஜ் மூலம் பதிவு செய்வதற்கும் மற்றும் ஒலிப்பெருக்கி அமைப்பதற்கான ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்,<br><br>ந.க.எண். 4370/2017/அ1 | தீர்மானம் எண்.198<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.32<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் மேற்கு பகுதியில் RCC கட்டிடம் AC சீட்டால் அமைக்கப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலைய கடை எண். 2 முதல் 17 வரையிலான கடைகளுக்கு ஏல வைப்புத் தொகை ரூ.2,00,000/- சொத்து மதிப்பு அசல் சான்றிதழ் கொடுக்கவேண்டிய தொகை ரூ.4,00,000/-ம் கூடுதல் பொறுப்புத்தொகை ரூ.2,00,000/ம் என நகர்மன்ற தீர்மானஎண்.173 நாள்.31.08.2023ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி கடைகள் AC சீட்டினால் அமைக்கப்பட்டுள்ளதாலும், ஏலம் கோர யாரும் முன்வராததாலும் அதற்கான வைப்புத்தொகையினை ரூ.1,00,000/- சொத்து மதிப்பு அசல் சான்றிதழ் கொடுக்கவேண்டிய தொகை ரூ.2,00,000/-ம் கூடுதல் பொறுப்புத்தொகை ரூ.1,00,000/ம் | தீர்மானம் எண்.199<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | என வைப்புத்தொகையினை குறைத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். 4370/2017/அ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.33<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20876/ஆர்1/2024, நாள்.20.07.2024-ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண் 1 முதல் 36 வரையிலான பகுதிகளில் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள இனங்களில் குறைவாக வரிவிதிப்பு (Under Assessed) செய்யப்பட்ட கட்டிடங்கள், சொத்துவரி விதிப்பு செய்யாமல் விடுப்பட்ட கட்டிடங்கள் (Un Assessed) மற்றும் பயன்பாடு மாற்றப்பட்ட வரிவிதிப்புகள் (Usage Conversion) ஆகிய இனங்களை கண்டறிந்து எந்த ஒரு கட்டிடமும் மற்றும் காலிமனையும் விடுப்படாமல் சொத்துவரி மற்றும் காலிமனை வரிவிதிப்பு செய்து வசூல் செய்யப்பட வேண்டும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். 1428/2024/அ1 | தீர்மானம் எண்.200<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.34<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20384/ஆர்2/2024, நாள்.19.07.2024-ல் நகராட்சிகளில் மூன்றாண்டு குத்தகையினங்களான வாரச்சந்தை, கட்டண பொதுக் கழிப்பிடங்கள், இருசக்கர வாகன நிறுத்துமிடங்கள், வாகனங்கள் மூலம் பொருட்கள் கொண்டு வந்து விற்பனை செய்தல் மற்றும் தெருவோர வசூல் உள்ளிட்ட இதர இனங்களுக்கு வசூல் செய்யும் உரிமம் ஏலம் /ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையின் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் குத்தகை இனங்களுக்கு ஏல அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை மட்டுமே வசூல் செய்யப்படவேண்டும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். 4370/2017/அ1 | தீர்மானம் எண்.201<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.35<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20384/ஆர்2/2024, நாள்.19.07.2024-ன்படி நகராட்சிகளில் மூன்றாண்டு குத்தகையினங்களான வாரச்சந்தை, கட்டண பொதுக் கழிப்பிடங்கள், இருசக்கர வாகன நிறுத்துமிடங்கள், வாகனங்கள் மூலம் பொருட்கள் கொண்டு வந்து விற்பனை செய்தல் மற்றும் தெருவோர வசூல் உள்ளிட்ட இதர இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை வசூல் செய்திட நகராட்சி ஆணையர் மற்றும் வருவாய் அலுவலர் / உதவி வருவாய் அலுவலர் / வருவாய் ஆய்வாளர் நகராட்சிகளின் முத்திரையிட்ட இரசீது | தீர்மானம் எண்.202<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மட்டுமே வழங்கப்படவேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதலாக வசூல் செய்வதோ அல்லது உரிய முத்திரை மற்றும் கையொப்பம் இல்லாத போலியான இரசீது மூலம் கட்டணம் வசூல் செய்வதோ கண்டறியப்பட்டால் உடன் அறிவிப்பு வழங்கி ஏல உரிமத்தினை இரத்து செய்வதுடன் உரிமதாரரை கருப்புபட்டியலில் (Black List) சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், தொடர் எண் அச்சிடப்பட்ட இரசீதுகள் மற்றும் பணமதிப்பு வில்லை பதிவேடு ( Money Value Form Register) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>ந.க.எண். 4370/2017/அ1 | |
| 28–06–2024 | பொருள் எண்.36<br>நாகப்பட்டினம் நகராட்சி க்குட்பட்ட நாகூர் அம்பேத்கர் நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமுதாய உட்கட்டிடத்திற்கு பாதாளசாக்கடை இணைப்பு, குடிநீர் இணைப்பு, மற்றும் மின்இணைப்பு உள்ளிட்ட கூடுதல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.203<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.37<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வார்டு 1 முதல் 36 வார்டு வரை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு சரம் எண்விரோ சர்வீசஸ் சென்னை நிறுவனத்தாருக்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் 2592/2022/எச்1, நாள் 24.04.2023 அன்று உரிய உத்தரவு வழங்கப்பட்டு 01.06.2023 முதல் 31.05.2024 ஒரு ஆண்டு முடிந்த நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுறையுன்படி மேலும் மூன்று மாத காலம் (**01.06.2024** முதல் **31.08.2024**) காலநீடிப்பு செய்யப்பட்டது . காலம் 31.08.2024 முடிவடையும் நிலையில் இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாக ஒருமனதாக நிறுவனத்தாரின் ஒப்பந்தத்தை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது. அதற்கான தீர்மானம் எண்.95 நாள் 28.06.2024 தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் **01.09.2024** பிறகு புதிய ஒப்பந்தபுள்ளி கோர உரிய விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டியுள்ளதால் சரம் எண்விரோ சர்வீசஸ் சென்னை நிறுவனத்தை பொது சுகாதாரத்தின் நலன் கருதியும்,அவசர அவசியத்தை முன்னிட்டு மேலும் மூன்று மாதக்காலம் (**01. 09. 2024** முதல் **30.11. 2024**) நீட்டிப்பு செய்யவும் அதற்கான உரிய தொகை வழங்கவும் , புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2044/2024/இ1 | தீர்மானம் எண்.204<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28-06-2024 | பொருள் எண்.38<br>நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளின் பொதுசுகாதார பணியின்கீழ் டெங்கு நோய் பரப்பும் ஏடிஸ் டெங்கு கொசு புழுக்கல் உருவாக காரணமாக உள்ள உரல்கள், டயர்கள், தேங்காய் மட்டைகள், உடைந்த மண்பாண்டங்கள் மற்றும் முட்டை தோல் போன்றவைகளில் தேங்கி நிற்கும் கழிவுநீர் உள்ளதை கண்டறிந்து மருந்துகள் தெளித்தல், புகை மருந்து அடித்தல், டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் இடத்தில் ஏற்படுத்துதல் போன்ற சிறப்பு டெங்கு பணிகள் நாளது தேதிவரை சிறப்புடன் நடைபெற்று வரும் நிலையில் மேற்கண்ட பணியின் ஒப்பந்தக்காலம் கடந்த 30.06.2024 ஆம் ஆண்டு முடிவடைந்துவிட்டதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர உள்ள நிலையில் மேலும் மூன்று மாத காலத்திற்கு (01.07.2024 முதல் 31.09.2024) அன்புமலர் சுய உதவி குழுவிற்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின்படி (நாள் ஒன்றுக்கு ரூ.385 வீதம்) பணிகள் மேற்கொள்வதற்கும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2024/எச்1 | தீர்மானம் எண்.205<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.39<br>நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளின் பொதுசுகாதார பணியின்கீழ் டெங்கு நோய் பரப்பும் ஏடிஸ் டெங்கு கொசு புழுக்கல் உருவாக காரணமாக உள்ள உரல்கள், டயர்கள், தேங்காய் மட்டைகள், உடைந்த மண்பாண்டங்கள் மற்றும் முட்டை தோல் போன்றவைகளில் தேங்கி நிற்கும் கழிவுநீர் உள்ளதை கண்டறிந்து மருந்துகள் தெளித்தல், புகை மருந்து அடித்தல், டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் இடத்தில் ஏற்படுத்துதல் போன்ற சிறப்பு டெங்கு பணிகள் நாளது தேதிவரை 40 DBC பணியாளர்கள் மூலம் பணி பார்க்கப்படுகிறது. மாவட்ட நோய் தடுப்பு அலுவலர் மற்றும் மாவட்ட மலேரியா தடுப்பு அலுவலர் அவர்களின் அறிவுரையின்படி டெங்கு காய்ச்சல் குறித்த தடுப்பு நடவடிக்கையாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 50 வீடுகள் வீதம் வாரம் 300 வீடுகள் என 25412 வீடுகள் பணிபார்க்க 84 நபர்கள் தேவைபடுவதால் பொது சுகாதார நலன் கருதி அவசர அவசியத்தை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால் 40 பணியாளர்களை கூடுதலாக தற்காலிமாக செப்டம்பர் 2024 முதல் நவம்பர் 2024 வரை மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2024/எச்1 | தீர்மானம் எண்.206<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.40<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.1 முதல் 36 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் தங்கள் கால்நடைகளில் சொந்த பொறுப்பில் வீட்டில் கட்டி வளர்க்காமல் மெயின்ரோடு, பஸ் ஸ்டாண்டு , கடை வீதி, மார்க்கெட், இரயில்வே ஸ்டேசன், கோவில் மற்றும் அரசு மருத்துவமனை பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறாக விடப்பட்டுள்ளதால், பொதுமக்கள் மற்றும் பொது சுகாதார நலன்கருதி சுற்றித்திரியும் கால்நடைகள் (ஆடு, மாடு, குதிரை) ஆகியவகைளை நகராட்சி தூய்மைப்பணியாளர்களைக்கொண்டு பிடித்து அப்புறப்படுத்துவதற்கும், நகராட்சி அனுமதியின்றி விடப்பட்டுள்ள கால்நடைகளுக்கு மாடு ஒன்றுக்கு ரூ.5000/-மும் , கன்று ஒன்றுக்கு ரூ.3,000/-மும், முதல் தடைவை அபராதம் | தீர்மானம் எண்.207<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | விதிக்கவும், தொடர்ந்து பொது இடங்களில் கால்நடைகளை விடப்பட்டால், மாடுகளை பிடித்து மாடு காப்பகத்தில் ஒப்படைக்க மன்றம்அனுமதி வேண்டப்படுகிறது..<br><br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2024/எச்1 | |
| 28–06–2024 | பொருள் எண்.41<br>நாகப்பட்டினம் நகராட்சியின் பொதுசுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின்கீழ், நகர எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தூய்மைப்பணிகள் நடைப்பெற்று வருகிறது. அவ்வாறு தூய்மைப்பணிகள் மேற்கொள்வதற்கு நடப்பு நிதி ஆண்டிற்கு (2024-2025 ஆம் நிதி ஆண்டு) தேவையான பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு விளம்பரக்கட்டணம் மற்றும் இதர தளவாடப்பொருட்கள் வாங்க ரூ.20.00 இலட்சத்திற்கு ஏற்கனவே மன்றப்பொருள் பெறப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் கிரிமி நாசினி பொருட்கள் வாங்க கூட்டுறவு சங்கங்களில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின் படி நேரடியாக பெற்றுக்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி கிரிமி நாசினி பொருட்கள் வாங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண். /2020/எச்1 | தீர்மானம் எண்.208<br>அ. கு நகரமன்ற உறுப்பினர்களின் விவாதத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க மன்றத்தின் தீர்மாணிக்கப்பட்டது. |
